Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 257

திங்கட்கிழமை
11 ஓகஸ்ட் 2025

ஆடி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## அமெரிக்கா, ஜப்பானுக்கு ஜனாதிபதி பயணம்!

கொழும்பு, ஓக.11
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அமெரிக்கா மற்றும் ஜப்பானுக்கு ☞11



இலங்கை தொடர்பாக

# ஜெனிவாவில் புதிய தீர்மானம்; அறிவித்தன கனடா, பிரிட்டன்!

அழுத்தங்கள் இருக்காது என்று இலங்கை நம்பிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 11

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் முன்வைக்கப்படும் என பிரிட்டனும், கனடாவும் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளன. ஆயினும் கடந்தகாலத் தீர்மானங்களுடன் ஒப்பிடும்போது இந்தத் தீர்மானம் மென்போக்குடையதாக இருக்கும் என்று இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ☞11


## யாழ்ப்பாணம் வரவுள்ள ஜனாதிபதி அநுரகுமார!

பல அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பிப்பார் என்று தகவல்

கொழும்பு, ஓக.11
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடம் நெருங்கும் நிலையில், வடக்கில் ☞11

## புலமைப்பரிசில் பெறுபேறு செப்ரெம்பரில் வெளிவரும்!

கொழும்பு, ஓக.11
நேற்று நடைபெற்று முடிந்த 2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட எதிர்பார்க்கப்படுகின்றது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நாடுமுழுவதும் ☞11



## புங்குடுதீவில் வாள்வெட்டு இளைஞர் கொலை

விரிவு பக்கம்:- 11

கொக்குத்தொடுவாயில் மீட்கப்பட்ட

## சான்றுப்பொருள்களை இனங்காண சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஓக.11
கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுப்பொருள்களை அடையாளம் காண உதவவேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் நிறை ☞11

## நேருக்குநேர் மோதிய கார் - மோ. சைக்கிள்!

பெண் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஓக.11
அக்கராயன் முறிகண்டி பிரதான வீதியில் அமைதிபுரத்துக்கு அண்மையில் நேற்று நடந்த விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். ☞11

## ஒன்றோடு ஒன்று மோதி 4 வாகனங்கள் விபத்து!

ஒருவர் உயிரிழப்பு

விரிவு பக்கம்:- 12

தரம் 5 மாணவர்களுக்கு

## பரீட்சை முடிந்த பின்னும் அழுத்தம் கொடுக்காதீர்!

பரீட்சை ஆணையாளர் நாயகம் பெற்றோரிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஓக.11
புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அழுத்தத்துக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் ☞11

## மலேரியாத் தொற்றுக்கு சிகிச்சை பெற்றவர் சாவு!



யாழ்ப்பாணம், ஓக.11
யாழ்ப்பாணத்தில் மலேரியாத் தொற்றுக் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நெடுந்தீவைச் சேர்ந்த ஞா.அமலஜெயான் (வயது-38) என்பவரே உயிரிழந்தவராவார். ☞11

முச்சந்தி முரளி

'எத்தினை தீர்மானம் கொண்டுவந்தாலும் தீர்வு மட்டும் வரப்போறேலை கண்டியளோ'

குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட

## முத்துஐயன்கட்டு இளைஞனின் உடற்கூறுகள் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், ஓக.11
முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டுக் குளத்தில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் உடற்கூறுகள் மேலதிக பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன.
முத்துஐயன்கட்டைச் சேர்ந்த எ.கபில்ராஜ் (வயது-32) என்ற குடும்பஸ்தரே குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். கடந்த 7ஆம் திகதி இவர் அங்குள்ள இராணுவ முகாமில் ☞11

## நெடுந்தீவுப் படகுச்சேவைகள் பரீட்சார்த்தமாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.11
நெடுந்தீவு- குறிகாட்டுவான் இடையே வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்ளும் படகுச்சேவை பரீட்சார்த்தமாக அதிகரிக்கப்படவுள்ளது. நெடுந்தீவுக் ☞11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4159 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 32 45 70 76 |
| விசேட எழுத்து | H |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1226 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 11 35 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0185 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 5 0 7 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2265 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 08 34 50 60 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5917 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 1 3 2 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1947 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 06 44 64 67 |
| விசேட எழுத்து | P |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0492 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 1 3 2 6 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0033 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 10 16 49 |

# தமிழ்த்தேசியப் பயணத்துக்கு தமிழரசு இணக்கப்பாடில்லை!

### ஐ.நா.வுக்கான கடித விவகாரத்தில் பொய்யுரைப்பு கஜேந்திரகுமார் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.11**

**ஐ.நா.வுக்குக் கடிதம் அனுப்பும் விவகாரத்தில் தமிழரசுக் கட்சியே பொய்யுரைத்துள்ளது. தமிழ்க் கட்சிகளிடையே இப்போது இணக்கப்பாட்டை ஏற்படுத்தத் தவறினால் தமிழ்த் தேசியம் அழியும் நிலை ஏற்படும். இணக்கப்பாட்டை ஏற்படுத்த நாங்கள் தொடர்ந்தும் முயற்சிப்போம்.**

இவ்வாறு யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு இலங்கையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வலியுறுத்தி தமிழ்த் தேசியக்கட்சிகள், சிவில் அமைப்புகள் எனப் பலரும் ஒன்றிணைந்து இணக்கத்துடன் கடிதத்தைத் தயாரித்து ஐ.நா.வுக்கு அனுப்பியுள்ளோம்.

இந்தக் கடிதத்தில் உள்ள விடயங்களில் தமிழரசுக் கட்சியும் இணக்கம் தெரிவித்து தாமும் கையொப்பம் வைப்பதாகத் தெரிவித்திருந்தது. அதற்கமைய ஆரம்பகட்டப் பேச்சுகளும் நடைபெற்றன. எனினும் இறுதியில் தமிழரசுக் கட்சி பொய்களைக் கூறியுள்ளது.

இதனால் இரு தரப்புக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக இந்தக் கடிதத்துடன் தான் இணங்குவதாகவும் கட்சித் தலைவரே குழம்புகிறார் என்றும் யாழ்ப்பாணத்தில் நடக்கும் கூட்டத்தில் பேசி ஒரு முடிவுக்குக் கொண்டுவருவோம் என்றும் அந்தக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் கூறினார்.

அதன்படி இந்தக் கடிதத்தை மேலும் பலப்படுத்துவதாக இருந்தால் பரவாயில்லை எனவும் அதில் வெட்டித் திருத்தம் செய்வதென்றால் தாமதம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் கடிதத்தின் தரத்தைக் குறைக்க முடியாது. தரத்தைக் கூட்டுவதாக இருந்தால் தாமதித்தாலும் பரவாயில்லை என எமது தரப்பில் கூறப்பட்டிருந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் முடிவடைந்த பின்னர் நடத்திய ஊடக சந்திப்பின்போது இதுவரையும் எங்களுக்குள் பேசப்பட்ட விடயங்களுக்கு மாறாக அப்பட்டமான பொய்களை சுமந்திரன் சொல்லியுள்ளார்.

அதற்குப் பிற்பாடும் 7ஆம் திகதி கொழும்பில் 5 மணிக்கு எனது இல்லத்தில் சந்திக்க இணங்கியிருந்தோம். தொடர்ந்தும் சந்திக்க விருப்பம் என்றால் அடுத்த வாரம் யாழில் சந்திக்கலாம் என்றும் நாங்கள் கூறினோம். நாங்கள் வெளிப்படைத்தன்மையாக நேர்மையுடன் இயங்க விரும்புகிறோம். ஆனால் அவர்களே திட்டமிட்ட பொய்களைக் கூறி வருகின்றனர். தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்பட்டு முன்னோக்கிப் பயணிக்கவேண்டுமாக இருந்தால் தமிழரசுக் கட்சி உட்பட நாம் அனைவரும் கட்டாயம் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் - என்றார். (ச-20)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0625 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 0 5 9 7 7 2 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2891 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 13 23 42 52 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 02 35 46 64 |
| வெற்றி வாரம் | 5052 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0745 |
| வெற்றி இலக்கம் | 09 17 49 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ராசி | கன்னி |
| வெற்றி இலக்கம் | 19 46 47 48 |
| சீட்டிழுப்பு வாரம் | 4603 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கம் | 15 42 59 67 |
| வெற்றி வாரம் | 2061 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 10.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 02 39 45 48 |
| வெற்றி வாரம் | 2717 |

# என்.பி.பி. - ஜே.வி.பி. இரண்டல்ல ஒன்றே!

### அரச தரப்பு தெரிவிப்பு



கொழும்பு, ஓக.11

என்.பி.பி., ஜே.வி.பி. என்ற எவ்வித பிளவும் அரசாங்கத்துக்குள் இல்லை என்று பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது என மொட்டுக்கட்சியினர் கூறிவரும் நிலையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கம் கூட்டுப்பொறுப்புடனும், ஒத்துழைப்புடனுமே செயற்பட்டுவருகின்றது. எமது தரப்புக்குள் எவ்வித பிரச்சினையும் இல்லை. எனினும் என்.பி.பி. ,ஜே.வி.பி. என அணிகள் பிளவுபட்டுள்ளன என்ற மாயையை உருவாக்குவதற்குச் சிலர் முற்படுகின்றனர். அது அப்பட்டமான பொய். எதிரணிகளுக்குள் தான் குழப்பம் தலைவிரித்தாடுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### இன்று கையளிக்கிறது எதிர்க்கட்சி



கொழும்பு, ஓக.11

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று திங்கட்கிழமை எதிர்க்கட்சிகளால் சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற நேரம் அவர் இராணுவத்தின் கிழக்கு மாகாணக் கட்டளை அதிகாரியாக இருந்தார். இந்தத் தாக்குதல் தொடர்பில் அவர் அறிந்திருந்தார் என்றும் இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகிறது.

அதேவேளை எதிர்க்கட்சிகளிடம் அரசியல் செய்வதற்கு எதுவும் இல்லாததால் இந்தப் பிரேரணையை அந்தக் கட்சிகள் கொண்டுவருகின்றன என்று அரச வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-44,75)

### சலுகைகள் நீக்கத்துக்கு

# நீதிமன்றை நாடுகின்றனர் முன்னாள் ஜனாதிபதிகள்

கொழும்பு, ஓக.11

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்குவதற்கு அரசு எடுத்திருக்கும் தீர்மானத்துக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் நீதிமன்றம் செல்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.


50 சட்டத்தரணிகளைக்கொண்ட சபையுடன் இவர்கள் ஒன்றிணைந்து பேச்சு நடத்தி ஆலோசனைகளைப் பெற்றுவருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் ஆரம்பக்கட்டப் பேச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா, மஹிந்த மற்றும் கோத்தாபய ஆகியோரின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.ஒரு சில நாள்களுக்கு முன் இரண்டாவது சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்கும் சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டாலும்கூட அரசால் நினைத்தவாறு இதை நடைமுறைப்படுத்தமுடியாது என்று ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார். (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**பச்சை மயில் வாகனத்தில் நல்லூர்க் கந்தன்**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட பெருந்திருவிழாவின் பன்னிரெண்டாவது நாள் மாலை உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன் போது நல்லூர்க் கந்தவேற்பெருமான் பச்சை மயில் வாகனத்திலும், வள்ளி - தெய்வானை பச்சைக்கிளி வாகனங்களிலும் உள்வீதி, வெளி வீதி உலா வந்தனர். (ச-66)

## கதாப்பிரசங்கமும் பக்திக்கானமும்

யாழ்ப்பாணம், ஓக.11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீ னக்கலாமண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஸ்ரீநந்தகோபன் அணிகனின் கதாப்பிரசங் கம் நிகழ்வும், பகீரதி சுப்பிரமணியக் குருக் களின் பக்திக்கானங்களும் இடம்பெறவுள் ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)

## தெய்வீகத் திருக்கூட்டத்தொடர்

யாழ்ப்பாணம், ஓக.11

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத்தொடரின் பதினான்காம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்ட பத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறவுள்ளது. வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தி யாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, வண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ இராம லிங்கசர்மா ரமணீதரக்குருக்கள் தலைமையில் இத்திருக் கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கலைநிகழ்வுகளை கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் ஆவரங்கால் நடராஜர் இராமலிங்கர் அறநெறிப்பாட சாலை, சிறுப்பிட்டி அண்ணமார் அறநெறிப்பாடசாலை, நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப்பாடசாலை, புத்தூர் சிவன் அறநெறிப்பாடசாலை, நீர்வேலி பொன்சக்தி கலா கேந்திரா அறநெறிப்பாடசாலை, புத்தூர் கன்னியர் வைர வர் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கவுள்ளனர்.


சிறப்பு நிகழ்வுகளாக திருமதி சித்திரா ஹவிக்குமாரின் மாணவர்கள் வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும், நுண் கலைமாணி திருமதி நிசாகரன் சைந்தவியின் மாணவர் கள் வழங்கும் வயலின் கச்சேரி நிகழ்வும், திருமதி சித்திரா ஹவிக்குமாரின் இசைக்கச்சேரி நிகழ்வும், மாணவர்களுக் கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

## அருளுரை!

யாழ்ப்பாணம், ஓக.11

நல்லூர்ப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப் பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று திங்கட்கிழமை இரவு 8மணி முதல் 8.30மணி வரை சிவகுரு ஆதீன மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சிவகுரு ஆதீனமுதல்வர் தவத் திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு "விதியின் பயன் இதுவோ" என்ற தலைப் பில் அருளுரை ஆற்றுவார். (ச-41-100.66)




# நல்லூர்த் திருவிழாவையொட்டி குருதிக்கொடைமுகாம்

கொழும்பு, ஓக.11

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு 'சேவ் ஏ லைவ்' நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவு, யாழ். மாநகர சபை மற்றும் யாழ். சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையுடன் இணைந்து வருடாந்தம் நடத் தும் குருதிக்கொடைமுகாம் நிகழ்வு இடம்பெறவுள் ளது.

அதன்படி பெருந்திருவிழாவின் சப்பறத்திருவிழா நாளான எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும், தேர்த்திருவிழா நாளான 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் இரவு 8 மணி வரையும், தீர்த்தத் திருவிழா நாளான 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையும், பூங்காவன நாளான மறு நாள் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மண்டபத்தில் குரு திக்கொடை முகாம் இடம்பெறும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)

## 14 ஆம் திருவிழா




### ஓடோடி வருவாயப்பா!

தாட்சண்யம் நிறைந்த நல்லூரானே
சுடராகத் தோன்றிய இறைபரனே
ஆட்படுத்தும் அலங்காரக் கந்தனே
அழகான காவடிகள் ஆடி வருகின்றார்
கூடவே தூக்குக்காவடியும்
குலமாதர் பால்கலசமும் சுமக்கின்றார்
தேடியே அவர்கள் குறை தீர்க்க
தேவனே ஓடோடி வருவாயப்பா!

*கலாபூஷணம், யாழ்முத்து*
*அரியாலையூர் சிவநாமம் சிவதாசன்*

### குறைகள் களைந்து அருள்தா குமரேசா

குன்றத்திலே குடிகொண்ட மால் மருகனே
குக்குடக் கொடியோடு வேலேந்தி வருபவனே
குருவாகிப் பிரணவம் காதிலே ஓதிய
குமர குருபரனேகந்த வடிவேலா
குவலயம் வலம் வந்தவனே சண்முகா
குறைகள் களைந்து அருள்வாய் குமரேசா!.

**திருமதி செல்வராணி பாக்கியநாதன்**
வட்டுக்கோட்டை

### வேலுடன் வேட்டையாடு

நல்லை நகராளும் நல்லைக்கந்தா
நல்லவர் நலம் வாழ தங்கரதமேறிவா
உன் அருளால் பெற்ற பிள்ளை

போதையில் தள்ளாடி கல்வி செல்வம்
பந்த பாசம் மறந்து தரம் கெட்டு அலைவதா

போதையுடன் அக்கரையில் அரக்கன்
இக்கரைக்கு
அக்கரையுடன் வரும் தீய அவனை
வேலாயுதா வேலுடன் வேட்டையாடு

சூரசம்ஹாரம் செய்
போதையில் பாதைமாறும்
இளைஞர்கள் வாழ்வதற்கு
கந்தா கடம்பா வினைதீர்க்க
தங்கத்ரேறி வா

**செல்வா சுப்பிரமணியம்**
பெருங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படக்கூடும். செலவுகளால் கையிருப்பு கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் செயற்படுவீர்கள். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்லதகவல் வந்துசேரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். செலவு செய்ய நேரிடும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** காரியங்கள் முடிவதில் சிறு சிறு தடைகள் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் எதிர்பாராத சலுகை கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. அலுவலகத்தில் சில விமர்சனங்களைச் சந்திக்க நேரிடும்.

# Automobile Technologies தனியார் நிறுவனத்தினால் முதலாவது Aion EV Experience காட்சியறை Colombo City Centre வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது

இலெக்ட்ரிக் வாகனத்துறையில் நவீனத்துவமான மற்றும் புத்தம் புதிய தயாரிப்பை அறிமுகம் செய்துள்ள Automobile Technologies தனியார் நிறுவனத்தினால் முதலாவது GAC மோட்டார் வகன காட்சியறை 2025 ஜுலை 25ஆம் திகதி Colombo City Centre வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஆட்டோமொபைல் டெக்னாலஜிஸ் (தனியார்) நிறுவனத்தின் பணிப்பாளர் சந்திரி ஜெயதிலக கலந்து சிறப்பித்தார். இந்த நிகழ்வில் இரண்டு பிரபல இசைக்கலைஞர்களான பாத்திய ஜெயக்கொடி மற்றும் சந்து வீரமன் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் இவர்கள் இருவரும் GAC Sir Lanka வின் விற்பனை நாம தூதுவர்களாக அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டனர்.

சீனா உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட நாடுகளில் வலுவான பிம்பத்தை நிலைநாட்டியுள்ள GAC விற்பனை நாமத்திற்கு தங்களது மதிப்புமிக்க பங்களிப்பை வழங்கமுடிந்தமைக்கு மிகவும் மகிழ்ச்சியடைவதாக இசைக்கலைஞர்களான பாத்திய மற்றும் சந்தோ தெரிவித்தனர். முற்றிலும் அரசுக்குச் சொந்தமான GAC குழுமம் Fortune Global 500 நிறுவனமாகும். மேலும் இது, வாகனத்துறையில் உற்பத்தி மற்றும் வடிவமைப்பில் முதன்மை நிறுவனங்களான Hyundia, Toyota, Honda மற்றும் Hion உடன் இணைந்து செயற்பட்டுவருகிறது.

GAC Aion இலெக்ட்ரிக் மோட்டார் கார், Aion V, Aion Y மற்றும் Aion ES ஆகிய மாதிரிகளில் மாடல்களில் ரூ. 14 மில்லியன் முதல் பெற்றுக்கொள்ள முடியும். Aion மோட்டார் வாகன மாதிரிகளுக்கு 8 வருடங்கள் அல்லது 160,000km Bumper to Bumper உத்தரவாதத்தையும், பேட்டரிக்கு 8 வருடங்கள் அல்லது 200,000km உத்தரவாதத்தைக் கொண்டுள்ளது. சமீபத்தில் கொழும்பில் BMICH இல் GAC பிராண்ட்






முதல் முறையாக விற்பனைச் சந்தைக்கு அறிமுகம் செய்ததோடு, மேலும் Automobile Technologies (பிரைவேட்) லிமிடெட் இலங்கையில் இலெக்ட்ரிக் வாகனங்களுக்கான கவனத்தை வாடிக்கையாளர்கள் மத்தியில் அதிக அளவில் ஈர்த்துள்ளது.

இந்தப் புதிய GAC Aion EV Experience காட்சியறையானது, இலங்கை வாடிக்கையாளர்களுக்கு சூழல் நட்புறவுமிக்க இலெக்ட்ரிக் வாகனமொன்றை உரிமையாக்கிக்கொள்வதன் முக்கியத்துவம் குறித்த அறிவையும், புரிதலையும் வழங்கும் மையமாக எதிர்காலத்தில் செயற்படும்.

இந்தக் காட்சியறை திறக்கப்பட்டதன் பின்னர் விற்பனையாகிய முதலாவது GAC Aion வாகனத்தின் சாவியை கோலாகலமாக பாத்திய மற்றும் சந்தோஷ் இருவரும் அந்த வாடிக்கையாளரிடம் ஒப்படைத்தனர்.

# நாட்டாரியற் கலைப்போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நவம்பரில்

யாழ்ப்பாணம், ஓக.11

'குரலோசை நுண்கலைகளின் தாயகம்' கலைமன்றத்தின் பத்தாவது ஆண்டுக் கலைவிழாவை முன்னிட்டு நாட்டாரியற் கலைப்போட்டிகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ளன.

வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், தென்மோடிக் கூத்து, இசைநாடகம் போன்ற துறைகளில் நடத்தப்படவுள்ள போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்குப் பெறுமதியான பரிசுத்தொகையும் வழங்கப்படவுள்ளது.

வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் ஆகியவை மூன்று பிரிவாகவும் ஏனைய போட்டிகள் வயதுக்கட்டுப்பாடு அற்றதாகவும் நடத்தப்படும். வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கப் போட்டிகளில் முதலாம் இடத்துக்கு 25 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்துக்கு 20 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும் பரிசுத்தொகையாக வழங்கப்படும். ஏனைய போட்டிகளுக்கு முதலாம் இடத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்துக்கு 40 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

போட்டிகளுக்கான விதிமுறைகளை 0776150248 எனும் கைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்று குரலோசையின் இயக்குநர் தவநாதன் றொபேட் தெரிவித்துள்ளார். (ச-100)

# நூலறிமுகமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஓக.11

எஸ்.கே.விக்னேஸ்வரனின் தமிழ் மொழிபெயர்ப்பில் றெஜி சிறிவர்த்தனாவின் தலைமறைவு வாழ்க்கை (ஒரு நினைவுக்குறிப்பு) நூலறிமுகமும் கலந்துரையாடலும் ந.மயூரரூபன் தலைமையில் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மைய சர்வதேச புத்தகத் திருவிழா அரங்கில் இடம்பெறவுள்ளது. (ச-41-159)



அச்சுவேலி பத்தமேனி வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர் உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அடியவர்கள்சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப் பொறுப்புக்கூறலுக்கு சுயாதீன வழக்குரைஞர் அலுவலகம்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.11**

**உள்நாட்டுப் பொறிமுறையை வலுப்படுத்தும் வகையில் சுயாதீன வழக்குரைஞர் அலுவலகத்தை உருவாக்கி, அதனூடாகப் பொறுப்புக்கூறலுக்குத் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர்மேலும்தெரிவிக்கையில், பொறுப்புக்கூறலுக்குத் தீர்வைக் காண்பதற்காக உள்நாட்டுப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரசியற் தலையீடுகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி சுயாதீன வழக்குரைஞர் அலுவலகத்தை ஏற்படுத்துவது உள்நாட்டுப் பொறிமுறை குறித்து சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை மேலும் அதிகரிக்கும். நாங்கள் சுயாதீன வழக்குரைஞர் அலுவலகத்தை ஏற்படுத்துவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளோம். எதிர்காலத்தில் இதற்கான சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

செம்மணி மனிதப் புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்ற வேண்டுகோள் குறித்து பதிலளித்துள்ள வெளிவிவகார அமைச்சர் செம்மணி விவகாரம் நீதித்துறையின்கீழ் வருகின்றது. இதில் அரசதலையீடு எதுவுமில்லை.

மன்னார், மாத்தளையிலும் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, அவற்றை அகழ்வது தொடர்பான விசாரணைகளின் நடைமுறைகளுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இந்த விடயங்களில் நாங்கள் வெளிப்படையாக உள்ளோம் - என்றார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவுக்குத் தலைமைதாங்கவுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கையின் நிலைப்பாட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார். (ச-இ)

## கனடாவாழ் ஈழச்சிறுமி கடலில் மூழ்கிச் சாவு!

கொழும்பு, ஓக.11

கனடா வாழ் ஈழத்தமிழ் சிறுமி ஒருவர் தாய்லாந்துக்குச் சுற்றுலா சென்றிருந்த நிலையில் கடலில் மூழ்கி கடந்த வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். நாவலடி, மயிலிட்டியைச் சொந்த இடமாகக் கொண்டு கனடாவில் வசித்துவரும் யொஹானா (வயது- 10) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கனடாவில் இருந்து குடும்ப சகிதம் தாய்லாந்துக்கு விடுமுறை கால சுற்றுலா சென்றிருந்த நிலையில் இந்தத் துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச-100)

## வவுனியாவில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3,065 மாணவர்கள் தகுதி

வவுனியா, ஓக.11

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நாடு முழுவதும் நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

வவுனியா வடக்கு வலயத்தில் 503 மாணவர்களும், தெற்குவலயத்தில் 2562 மாணவர்களும் என 3 ஆயிரத்து 65 மாணவர்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சைக்குச் சுமார் 3இலட்சத்து 7ஆயிரத்து951 மாணவர்கள் தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-110)



## இலங்கைக்குக் கடத்தவிருந்த ஒரு தொன் இஞ்சி மீட்பு

சென்னை, ஓக.11

இந்தியாவின் மண்டபம் அடுத்து வேதாளைக் கடற்கரையிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுப்படகில் இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த சுமார் ஒரு தொன் எடை கொண்ட சுக்கு (காய்ந்த இஞ்சி) வாகனத்துடன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மண்டபம் சுங்கத்துறை தெரிவித்துள்ளது. மரைன் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோதே 35 மூடைகளில் அவை கைப்பற்றப்பட்டன.

இதன்பெறுமதி பல இலட்சம் இருக்கலாம் எனவும் சந்தேகநபர்களைக் கைதுசெய்ய விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் மரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-56)

## டொலர் வருகை உயர்வு

கொழும்பு, ஓக.11

2025 ஜூலை வரையிலான ஏழு மாதங்களில், இலங்கையர்களின் அந்நியச் செலாவணி பணம் அனுப்புதல் 4.43 பில்லியன் அமெரிக்க டொலரைத் (ரூ. 1.32 டிரில்லியன்) தாண்டியுள்ளது.

2024ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் தொகை 3.71 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தது

கடந்த ஏழு மாத பணம் அனுப்புதலின் மதிப்பு 2025 பாதீட்டில் ஆண்டு வருமான வரி வசூலிப்பு மதிப்பீட்டைவிட அதிகமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## சாமக்கூத்துக்கு ஆப்பு

கறையான் பிடிச்ச வீடு உருப்படாது. என்னதா மருந்தடிச்சாலும், கறையான் புத்தை வெட்டி எறிஞ்சாலும்கூட எங்கையோ பதுங்கியிருந்திட்டு, பிறகு பழையபடி பெருகி, எல்லாத்தையும் அரிச்சு நாசமாக்கிப் போடும். அப்பிடியொரு கறையான் கம்பஸில இருக்குது. அதுக்குப் பேர் 'ராக்கிங்'. உந்த ராக்கிங்கை அழிக்க என்னென்னவோ பிளான் எல்லாம் போட்டும், அது ஏதோ ஒரு ரூபத்தில உலாவிக்கொண்டுதான் இருக்குது.யாழ்ப்பாணக் கம்பஸிலையும் ராக்கிங் இப்ப தலைவிரிச்சாடுதாம்.


கோண்டாவிலுக்குக் கிட்ட ஆக்களின்ர வீடுகளிலரூம் எடுத்து தங்கியிருக்கிற சீனியர்மார், இரவு பத்து மணிபோல ஜூனியர் பெடியளுக்குக் கோல் பண்ணி, தங்கட ரூமுக்கு வரச்சொல்லுகினம். மாட்டன் எண்டுறவையை அடிபோட்டு வலுக்கட்டாயமாக் கூட்டிக்கொண்டு போகினம். அங்க போனால் அது ரூம் மாதிரி இருக்காது. ஆமிக்காரன்ர சித்திரவதைக்கூடத்துக்கும் அந்த ரூமுக்கும் பெரிசா வித்தியாசமிருக்காது. அங்க வைச்சு ஜூனியர் பெடியளுக்கு அடிக்கிறது, முட்டுக்காலில நடக்கச் சொல்லுறது, உடுப்பைக் கழட்டிப் போட்டு டான்ஸ் ஆடச் சொல்லுறது, அப்பிடி டான்ஸ் ஆடேக்க அதை போனில வீடியோ எடுத்து வட்ஸப் குரூப்பில போடுறது எண்டு பெரும் அட்டகாசம். இரவெண்டதால அதைப்பற்றி மார்ஷலுக்கோ ( கம்பஸ் பெடியளின்ர ஒழுக்கம் சம்பந்தப்பட்ட விசயங்களுக்குப் பொறுப்பான அதிகாரி) இல்லாட்டி லெக்சர்மாருக்கோ முறைப்பாடு செய்ய ஏலாது. அதைப் பாவிச்சுத்தான் சீனியர்மார் இப்பிடி ஏமசாமத்தில ஜூனியர் பெடியளைக் கூப்பிட்டு வதைக்கினமாம். அதால இருட்டினாலே ஜூனியர் பெடியளுக்கு குலைப்பன் அடிக்குதாம்.

இதெல்லாம் எப்பிடியோ வெளியில வந்து, பாதிக்கப்பட்ட பெடியளின்ர பெற்றோரும், கம்பஸ் நிர்வாகமும் மானியங்கள் ஆணைக்குழுவிட்ட முறைப்பாடு செய்திருக்கினம். ஆணைக்குழுவும் இப்ப அதிரடியா ஒருமுடிவை எடுத்திருக்குதாம். இனிமேல் சீனியர் பெடியள் தங்கியிருக்கிற வீடுகளைச் சுத்தி பொலிஸ் இரவிரவா வட்டமிடப்போகுது. ஏதும் ராக்கிங் அசுமாத்தம் தெரிஞ்சால், அப்பிடியே ஆக்களை அள்ளிக்கொண்டு போறதுக்கும் ஏற்பாடுகள் ரெடியாம். இதுக்குப் பிறகாவது திருந்தாமல், பொலிஸுக்கே டிமிக்கி குடுத்தும் ராக்கிங் செய்வம் எண்டு நிக்கிறவையைப் பற்றி பாதிக்கப்பட்டவை முறைப்பாடு செய்தால், கம்பஸ் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கமுதலே பொலிஸ்காரர் செய்யவேண்டியதைச் செய்து, அடைக்கவேண்டிய இடத்தில அடைக்கச் சொல்லியும் ஓர்டர் வந்திருக்காம். இந்த முறையாவது ராக்கிங் கட்டுக்குள்ள வருமோ? இல்லாட்டி கறையான்மாதிரி இன்னும் இருந்து கம்பஸின்ர மானத்தை அரிக்குமோ எண்டு பாப்பம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய மட்டத்தில் சாதித்த மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.11
விவசாய நுட்பங்களைக் கைக்கொண்டு சிறந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் போட்டியில், தேசிய மட்டத்தில் வெள்ளிப்பதக்கம் பெற்ற வலிகாமம் கல்வி வலய மாணவர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி தொழில்நுட்பப் பீடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. யாழ். மாவட்ட களக்கற்கைகள் நிலைய முகாமையாளர் அ.கோகுலராஜன் சான்றிதழ்களை வழங்கிக்கௌரவித்தார். (ச-25,27,20)

# தேவாலயத் திருவிழாக்களின்போது வீதிகளில் ஒலிபெருக்கியைத் தவிர்க்குக

## யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஓக.11**
**கத்தோலிக்க தேவாலயங்களில் திருநாள்களின்போது வீதிகளில் ஒலிபெருக்கிப் பாவனையைத் தவிர்க்கும் நடைமுறையை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மறைமாவட்டத்தில் 'புதிதாய் வாழ்வோம்' என்ற தலைப்பில் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டில் எடுக்கப்பட்ட மிகவும் முக்கியமான தீர்மானங்களில் ஒலிபெருக்கிப் பாவனையைத் தடைசெய்தல் காணப்பட்டது. இந்தக்கட்டுப்பாடு சில ஆலயங்களில் உதாசீனப்படுத்தப்பட்டமையால் இன்று இது ஒரு சமூகப் பிரச்சினையாக மாறிவிட்டது. பலர் இதுபற்றி தமது கடுமையான கண்டனங்களையும் அதிருப்தியையும் தெரிவித்துள்ளார்கள். ஆலய வழிபாடுகளின்போது பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கி சாதனங்களினால் ஆலயச் சுற்றாடலில் வாழும் மாணவர்கள், பாடசாலைகள், நோயாளர்கள், வயோதிபர் ஆகியோருக்கு ஏற் படும் இடையூறுகள் தவிர்க்கப்பட வேண்டும்.
எனவே ஒலியால் சூழல் மாசடைதல் சமூகத் தீமையாக மாறிவிட்டதால் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வீதிகளில் ஒலிபெருக்கி பாவிப்பதை முற்றாகத் தவிர்க்கவேண்டும் - என்றார். (ச-60,66)



# சிவலிங்கம் பிரதிஷ்டைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 11
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்கான கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சிவபூமி அறக்கட்டளையினரால் சிவலிங்கம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டநிலையில் அந்தச் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்கான கட்டடத்தை அமைப்பதற்கான நிதியைத் தென்னாடு சைவ மகாசபையினர் வழங்கினர். (ச-25, 27)






# பௌர்ணமி கலைவிழா

வவுனியா, ஓக.11
வவுனியா மாநகரசபையின் கலாசாரக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட பௌர்ணமிக் கலைவிழா நிகழ்வு மாநகரசபையின் கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
இதன்போது பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டிருந்ததுடன் "வளம்மிகு வன்னியும் வவுனியா மாநகர சபையும்"எனும் தலைப்பில் சிறப்புக் கவியரங்கமும் இடம்பெற்றது. மேலும் சபையின் சபா மண்டபத்திற்கான செங்கோலை வடிவமைத்துக்கொடுத்த காமதேனு சிற்பாலயத்தின் கலைஞர் கதிர்காமநாதன் கயிலைறஞ்சன் மாநகரசபையால் கௌரவிக்கப்பட்டார்.
மாநகரசபையின் முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், முத்து முகமது, துணைமுதல்வர் ப.கார்த்தீபன், மாநகரசபை உறுப்பினர்கள், கலைஞர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-110)

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு


யாழ்ப்பாணம், ஓக.11
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான நி.பாபுதரன் "முருக பக்தியாளர்கள்" எனும் தலைப்பில் ஆன்மிக உரை ஆற்றினார். சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக 50 ஆயிரம் ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,66)



குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த வெள்ளிக் கிழமை முற்பகல் பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

சிந்தனையால் பயத்தை வெல்லமுடியாது;
ஆனால், செயற்பாடு அதனை
சரியாகச் செய்கின்றது.

– கிளமெண்ட் ஸ்டோன்–

# முல்லைத்தீவும் இராணுவமெனும் முள்ளும்!

முல்லைத்தீவு முத்து ஐயன்கட்டுப் பகுதியில் இராணுவ முகாமுக்குள் அழைத்து, சிப்பாய்களால் தாக்கப்பட்ட இளம் குடும்பத்தலைவர் ஒருவர், முத்தையன்கட்டு குளத்துக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 'இராணுவத்தினர் ஐந்து இளைஞர்களை அழைத்துத் தாக்கினார்கள். அவர்களில் மூவர் தப்பித்துத் தத்தமது வீடுகளுக்குச் சென்ற நிலையில், ஒருவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இன்னொருவர் காணாமற்போன நிலையில், அவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்' என்பதுதான் பொதுமக்களுடைய குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது சிப்பாய்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் காரணமாக ஒருவித பதற்றத்துக்குள் ஆட்பட்டிருக்கின்றது முத்துஐயன்கட்டும் முல்லைத்தீவும்.

முல்லைத்தீவில் உள்ள இராணுவப் பிரசன்னம் மிகப் பெரியது. அங்கு இரண்டு பொதுமக்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர் என்பதே நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிகரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டோரின் குற்றச்சாட்டு. எந்தவொரு பகுதியிலும் இராணுவத்தினர் அளவுக்கு அதிகமாக நிலைகொண்டிருந்தால், அது சிவில் செயற்பாடுகளுக்கும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் அச்சுறுத்தலையே ஏற்படுத்தும் என்பதையே, முல்லைத்தீவில் தொடர்ச்சியாக இடம்பெறும் இதுபோன்ற சம்பவங்கள் கட்டியம் செய்கின்றன.

முல்லைத்தீவில் இருந்து இராணுவப் பிரசன்னம் உடனடியாகக் குறைக்கப்படவேண்டும். மக்கள் மிகவும் அமைதியான முறையிலும் அச்சமின்றியும் வாழ்வதற்கு வழி ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், குருந்தூர்மலையில் இடம்பெறும் ஆக்கிரமிப்புக்குத் துணைபோவதற்காகவும், முல்லைத்தீவில் அடாத்தாக இடம்பெறும் பௌத்தத் திணிப்பை கனகச்சிதமாக மேற்கொள்வதற்காகவும் இராணுவத்தின் இருப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அவசியமாகவே அமைந்துள்ளது. அது முல்லைத்தீவை ஒவ்வொருநாளும் ஆரோக்கியமற்ற நிலைக்குள் இட்டுச் செல்கின்றது. அதற்கான காலக் கண்ணாடியாகவும், முத்து ஐயன்கட்டு இராணுவ முகாமில் இடம்பெற்றுள்ள சம்பவங்களைக் கொள்ளலாம்.

போர் இடம்பெற்றாலும், இல்லையென்றாலும் இராணுவத்தின் மனநிலை ஒன்றுதான். அது சிவில் வாழ்க்கைக்கு நெருக்கமாகும்போது இன்னும் ஆபத்தானதாகவே மாறும். போர் முடிவடைந்து ஒன்றரைத் தசாப்தங்கள் கடந்துள்ள போதிலும், 'இராணுவம்' என்றதும் ஒருவித பதற்றத்துக்குள் தமிழ் மக்கள் தள்ளப்படுவதும் இதனாலேயேதான். ஆதலால்தான் இராணுவத்தினரின் அதீத பிரசன்னத்துக்கு எதிராக தமிழர்கள் வலுவாகப் போராடிவருகின்றனர். தாக்கியும் அடித்தும் துன்புறுத்தியும் கொன்றும் பழக்கப்பட்ட கைகள், திடீரென மலர்களைப் பறிக்கப்போவதில்லை. எனவே, பொதுமக்களின் கண்ணியமான வாழ்க்கைக்கு முற்றான பங்கத்தை ஏற்படுத்தும்வகையில் முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை ஜனாதிபதி அநுர தலைமையிலான ஸ்ரீலங்கா அரசாங்கம் கணிசமாகக் குறைக்கவேண்டும். நல்லிணக்க நாட்டை உருவாக்குவதற்கு அத்தயை செயற்பாடு காலத்தேவையானது. அத்துடன், முத்து ஐயன்கட்டு இராணுவ முகாமில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் விரைவான விசாரணைகள் இடம்பெற்று நீதி நிலைநாட்டப்படுவதும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதும் மிகவும் அவசியமானது.



## வனவிலங்குப் பாதுகாப்பு; அதிகாரிகள் பற்றாக்குறை

கொழும்பு, ஓக.11

**நாட்டில் வனவிலங்குகளைப் பாதுகாக்க சுமார் 8,000 அதிகாரிகள் தேவைப்படும் நிலையில், தற்போது 800 பேர் மட்டுமே பணியில் இருக்கின்றனர். இதனால் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகள் எழுந்துள்ளன என்று வனவிலங்குத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

அபயபூமிகள் மற்றும் தேசிய சரணாலயங்களைப் பாதுகாக்க அமைக்கப்பட்டிருந்த அலுவலகங்களில் பெரும்பாலானவை அதிகாரிகள் பற்றாக்குறையால் மூடப்பட்டுள்ளன.
தற்போது இயங்கும் சில அலுவலகங்களில் ஒன்று அல்லது இரண்டு வனவிலங்கு அதிகாரிகள் மட்டுமே உள்ளனர்.

அதிகாரிகள் பற்றாக்குறையால் வனப் பாதுகாப்புப் பணிகள் முடங்கிப்போயுள்ளன.
இந்த நிலைமை குறித்து வனவிலங்குத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## சிறுபோகத்தில் 11,000 தொன் நெல் கொள்வனவு

கொழும்பு, ஓக.11
இம்முறை சிறுபோகத்தில் இதுவரை 11,000 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப் படுத்தல் சபை தெரிவித்துள்ளது.
அதிகளவிலான நெல் அம்பாறை மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார்.
நாடு நெல் ஒரு கிலோ 120 ரூபாவுக்கும் சம்பா நெல் ஒரு கிலோ 125 ரூபாவுக்கும் கீரிச் சம்பா நெல் ஒரு கிலோ 132 ரூபாவுக்கும் அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படுகின்றது. (ச-இ)



## 79 திட்டங்களில் ஐந்தே முழுமை

*அரசு ஆமை நடை*

கொழும்பு, ஓக.11
2025 மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கப்படவிருந்த 79 மிகப்பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களில் ஐந்து மட்டுமே திட்டமிட்டபடி முடிந்துள்ளதாக திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் துறையின் அறிக்கை தெரிவித்துள்ளது.
முன்னைய ஆண்டுகளைப் போலவே, இந்த அறிக்கை இலங்கையில் திட்டச் செயற்படுத்தலின் இருண்ட காலத்தை சித்திரிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 'ஈஸி காஷ்' இல் போதைப்பொருள் விற்றவர்கள் கைது

கொழும்பு, ஓக.11
'ஈஸி காஷ்' முறையைப் பயன்படுத்தி ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை மதுகம நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் ஏழு நாள்கள் தடுத்துவைத்து விசாரணை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)



## தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுத் தலைவராக தயா லங்கபுர நியமனம்!

கொழும்பு, ஓக.11
சிரேஷ்ட ஊடகவியலாளர் தயா லங்கபுர, தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
தற்போது அவர், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிங்கள வார இதழான ரத்து இரவின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிவருகிறார்.
இன்று திங்கட்கிழமை அவர் தனது பொறுப்புகளை ஏற்கவுள்ளார். (ச-இ)



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானையில் குருதிக்கொடை

சங்கானைப் பிரதேச செயலகம் நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாமில் குருதிக்கொடையாளர்களைப் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.

1 சதுர அடி - 65 ரூபா

தொடர்பு: 076 470 4894

**பெண் பராமரிப்பாளர் தேவை**

புற்று நோயிலிருந்து தேறிவரும் எனது மனைவியை வீட்டில் தங்கியிருந்து கவனிக்க 40 வயதிற்கு மேற்பட்ட பெண் பணியாளர் தேவை.

தொடர்பு:- 071 847 5539

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 14 . 08 . 1933

இறப்பு 30 . 07 . 2018

### அமரர் செல்லத்துரை இராஜரட்ணம்


திதி: ஆடிமாத தேய்பிறை துதியை

மண்ணோடு உங்கள் பூவுடல்
மறைந்து விட்டாலும் - நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை!
எம்மிடம் விட்டுச்சென்ற பாசமான
நினைவுகளை எண்ணி வணங்குகின்றோம்

75/1, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 1ம் வருட நினைவு



மண்ணில் 08 . 02 . 1946

விண்ணில் 11 . 08 . 2024

### அமரர் வேலாயுதம் அரியநாயகம்


(Retired Marine Engineer, Member of YMCA Jaffna)

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)

அன்பாய் அரவணைத்து அறிவுரைகள் பல கூறி
விகடமாய் பேசி எம்மையெல்லாம் மகிழ்வித்துவிட்டு
எங்கு சென்றீர் அப்பா...
கல்வியில் உயர்ந்து உடல் வருத்தம் பாராது உழைப்பில் உயர்ந்தீரே...
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம்வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா
உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 26 . 03 . 1947

மறைவு 14 . 07 . 2025


### அமரர் சின்னத்தம்பி அருள்ராசலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் அஸ்திக்கரைப்பு இன்று (11.08.2025) திங்கள் காலையில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் புதன்கிழமை (13.08.2025) அன்னாரின் வதிவிடமான குப்பிளான் தெற்கில் உள்ள அவரது இல்லத்திலும் நடைபெற்று அதனை தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு வேண்டிக் கொள்கின்றோம்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 06 . 1944

மறைவு 09 . 08 . 2025

### வச்சிரவேலு வடிவேலு

மீசாலை வடக்கு வேம்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வச்சிரவேலு வடிவேலு அவர்கள் 09.08.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வச்சிரவேலு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சின்னையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பகீரதி மற்றும் தர்ஷினி, வினோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன், ஸ்ரீகாந்தன், சிபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நறோஷன், பிருந்தலக்ஷ்மி, நிதர்ஷனன், பிரணவி, வைஷ்ணவி, சயந்தவி, சதுஷ்யன், சாயிஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, மீனாட்சி, சிவபாக்கியம் மற்றும் வள்ளிப்பிள்ளை, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, கனகரத்தினம், யோகராசா மற்றும் சண்முகலிங்கம், லீலாவதி, சத்தியேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ராசரத்தினம் மற்றும் துஷ்யந்தி, மகேந்திரன், திருலோகநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.08.2025 செவ்வாய்க்கிழமை மீசாலை வடக்கு, வேம்பிராய் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 334 1872

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 01 . 1968



மறைவு 09 . 08 . 2025

### அமரர் பொன்னுத்துரை நந்தகோபாலன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நந்தகோபாலன் அவர்கள் கடந்த (09.08.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பகவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவராமகிருஷ்ணன்-பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், தயாநிதி அவர்களின் பாசமிகு கணவரும், தர்சிகா, அனுசிகா, மிதுசன், நிரோசன், அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசங்கர், ரகுபரன், லக்சிகா ஆகியோரின் மாமனாரும், சுமதி, ஜெயக்குமார், ஜெயக்குமாரி, ஜெயராணி ஆகியோரின் சகோதரனும், சசிதேவி, சிவாநந்தன், கோபாலசிங்கம், ரதிகாந்தன், விஜயகுமார், சர்மிலா ஆகியோரின் மைத்துனரும், செந்தில்நாதன், செல்வரஞ்சினி ஆகியோரின் சகலனும், சரண்விஸ்ணு, ஆருத்திரன், ஜனனிபிர்ரிகா, டிவ்யலக்ஷ்மி, ப்பிரணீஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
குறுக்கு வீதி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
076 962 9409
077 239 7443


# பெரும்போகச் செய்கை பாதிப்பு ரூ. 1,484 மில்லியன் இழப்பீடு

## கமநலக் காப்புறுதிச்சபை தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.11**

**2024 மற்றும் 2025ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்தில் நெல், சோளம், பெரிய வெங்காயம், மிளகாய், சோயா, உருளைக்கிழங்கு ஆகிய பயிர்ச்செய்கை களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இந்த ஆண்டு ஆயிரத்து 484 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகக் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்தும் நோக்கில் காப்புறுதித்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது. வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளினால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இந்த நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் நிலப் பயிர்ச் செய்கைக்குக் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபா வரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ச-இ)

மட்டக்களப்பு துறைநீலாவணைப் பகுதியில் அமைந்துள்ள வேல்முருகன் ஆலயத்தின் கோரிக்கைக்கமைவாக ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகளுக்காக சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் நிதியுதவி வழங்கிவைக்கப்பட்டது. (ச-41-66)





உரும்பிராய் ஸ்ரீ காளி அம்பாள் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

# குறிகாட்டுவான் இறங்குதுறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## அமைச்சர் பிமல் நேரடியாக ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு நேரடியாகப் பயணம் மேற்கொண்டு அங்கு ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டார். இதன் போது விரைவான சில நடவடிக்கைகளுக்காக அவர் அதிகாரிகளுக்கு உத்தரவுகளையும் பிறப்பித்தார்.

இந்தக் களப்பயணத்தின்போது கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குரூஸ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், நெடுந்தீவுப் பிரதேச செயலாளர், வேலணை உதவிப் பிரதேச செயலாளர், கடற்படை அதிகாரிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-66.9)



# புதிய கல்விச்சீர்திருத்தம் தெளிவுபடுத்தல் அவசியம்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கல்விச் சீர்திருத்தத்தினை நிகழ்காலத்துக்குத் தேவையான வகையில் முன்னெடுப்பதில் தவறில்லை. ஆனால் அந்தச் சீர்திருத்தங்கள் எவ்வாறு இடம்பெறவேண்டும் என்பது தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டும். எதிர்காலச் சந்ததியினரை இயந்திரமயப்படுத்தும் வகையிலான கல்விச் சீர்திருத்தங்கள் சிறந்தவையல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் யாருடன் கலந்தாலோசித்திருக்கிறது? இதற்காக அரசாங்கம் முன்வைக்கும் ஆதாரம் என்ன? கல்விச் சீர்திருத்தத்துக்கான அறிக்கையை அரசாங்கம் தயாரித்திருக்கிறது என்றால் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியிருக்கின்றார். இதற்கு அரசாங்கத்தின் தரப்பில் வழங்கப்படும் பதில் என்ன?

அடுத்த ஆண்டு ஆரம்பமாகும்போது சில வகுப்புகளுக்கான பாடப்பரப்புகளில் மாற்றங்கள் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. அவ்வாறெனில் இந்த மாற்றம் தொடர்பில் எவ்வாறு தீர்மானங்கள் எடுக்கப்படப்போகின்றன? இந்த விடயம் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது எவ்வாறு அவை நடைமுறைப்படுத்தப்படும்? கலந்துரையாடல்களில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில், அவற்றை நடைமுறைப்படுத்த முற்படுவது சிறந்த தீர்மானமல்ல - என்றார். (ச-இ)


## 4ம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு 05 . 05 . 1937



மறைவு 26 . 07 . 2021

### அமரர் இலட்சுமிப்பிள்ளை நடராசா (தவமணி)

திதி: கிருத்திகை 11.08.2025

அம்மா உங்களின் நீண்ட ஆயுளை பொய்யாக்கி
எம்மை வாழ்நாள் முழுவதும் ஏமாற்றியது ஏனோ!!!
அம்மா......தன் முகவரி தொலைத்து....
தன் அடையாளம் இழந்து.....
தன் விருப்பு வெறுப்புக்களை மறந்து.....
தனக்கென்று எதையுமே வைத்திருக்காமல்.....
நம்மை மட்டுமே நேசிப்பவள்......
நமக்காக மட்டுமே யோசிப்பவள்....
என் அம்மா
உங்களின் ஆன்மா சாந்தியடைய எங்கள் வைரவப்
பெருமானை வேண்டி நிற்கின்றோம் அம்மா....
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

விராங்கொடை
தெல்லிப்பழை

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகள் ராகினி

(CS 59083) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய கலாசார மண்டபம்; வவுனியாவில் அடிக்கல்

வவுனியா மன்னார் வீதி பட்டானிச்சூர் புளியங்குளத்தில் இஸ்லாமிய கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது.

முஹைதீன் ஜிம்மா பள்ளிவாசல் நிர்வாகத்தின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், முத்துமுகமது, வவுனியா மாவட்டச் செயலர், மற்றும் மாநகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி, ஏ.ஆர்.எம் லறீப், பாறூாக் பர்ஷான் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-110)



அமரர். சங்கரப்பிள்ளை பவன்ராஜ்ஜின் 31ஆவது நாள் நினைவாக ஏற்பாடுசெய்யப்பட்ட குருதிக்கொடை முகாம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் திக்கரை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)



# கைவிடப்பட்டது பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக.11

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று முதல் நடத்தவிருந்த நாடளாவிய பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவர்களின் இடமாற்றம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், இன்று காலை 8 மணிக்குள் தமது கோரிக்கைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.


இந்தநிலையில், சுகாதார அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கிடைத்த நேர்மறையான மற்றும் ஆக்கபூர்வமான பதில்களைக் கருத்தில் கொண்டு நாடளாவிய பணிப்புறக்கணிப்பை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகக் குழு இடைநிறுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக.11

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், திருகோணமலை மூதூர்ப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட அக் ஷன் பாம் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 17 பணியாளர்களின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ். நெடுந்தூரப் பேருந்து நிலையம் முன்பாக கடந்த திங்கட்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மூத்த போராளி பொன் மாஸ்டர், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ச-25,66)






# முரசுமோட்டையில் அறுவடை விழா

கிளிநொச்சி, ஓக.11

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி வயலில் இயந்திரம்மூலம் நாற்று நடுகை செய்யப்பட்ட நெற்செய்கை வயலின் அறுவடை விழா பாடசாலையின் முதல்வர் அ.பங்கையற் செல்வன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் க.முருகவேல்கலந்துகொண்டு அறுவடையை ஆரம்பித்துவைத்தார். குறித்த வயல் நாற்று நடுகை முதல் அறுவடை வரையான அனுசரணையை முரசுமோட்டை புலிங்கதே வன் கமக்காரர் அமைப்பினர் வழங்கியிருந்தனர். (ச-113)



# ஆசிரியர் கலாசாலை மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.11

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் உடற்கல்வித்துறை விரிவுரையாளர் பா.பாஸ்கரனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் உடற்கல்வித்துறை விரிவுரையாளர் க.அன்பரசி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா...

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள ஜனாதிபதி, அதன்பின்னர் ஜப்பானுக்குச் செல்லவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி அமெரிக்கா பயணமாகவுள்ளார். (அ-எ-இ)

## யாழ்ப்பாணம்...

முக்கியமான பல அபிவிருத்தி த் திட்டங்களையும், உட்கட்டமைப்பு மேம்பாடுகளையும் செய்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். அதன் ஆரம்பகட்டமாக யாழ். குறிகாட்டுவான் இறங்குதுறைமுகத்தைத் தரமுயர்த்துவதற்கான திட்டத்தை ஜனாதிபதி தனது யாழ்ப்பாணப் பயணத்தில் ஆரம்பிக்கவுள்ளார்.

காரைநகர் உட்பட யாழ்ப்பாணத்தின் கரையோரப்பகுதிகளில் கடற்றொழிலாளர்களின் நலன்கருதி பல திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் பல தரப்புகளுடன் சந்திப்பு களையும் ஜனாதிபதி தனது யாழ்ப்பாணப் பயணத்தின் போது நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார் என்றும் அறியமுடிகின்றது. (அ-எ-44)

## சான்றுப்...

வேற்றுப்பணிப்பாளர் சட்டத்தரணி கலாநிதி தற்பரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் 45 வகையான சான்றுப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணை முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் நடத்தப்பட்டுவருகின்றது. முதற்கட்ட தொல்பொருள் பகுப்பாய்வுகள் இந்த புதைகுழி 1994 - 1996 ஆண்டு கால கட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கூறுகின்றன.

புதைகுழி அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட சான்றுப்பொருள்கள் தொடர்பில் பொதுமக்கள் தகவல்களையும், அடையாளங்களையும் உறுதிப்படுத்தமுடியும். இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பொதுமக்களிடம் இந்த வழக்குத் தொடர்பான முக்கியமான தகவல்கள் இருக்கலாம் என்பதை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் நம்புகிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் பயிற்சி பெற்ற அதிகாரிகள், இந்த வழக்குத் தொடர்பான முக்கியமான தகவல்களைக் கொண்ட சாத்தியமான உறவினர்கள், சாத்தியமான சாட்சிகள் தொடர்பில் நேர்காணல் செய்வார்கள். சாட்சியங்கள் அளிப்போரின் இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

இது தொடர்பான தகவல்களை இலக்கம் 40, மூன்றாம் மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய மற்றும் இல.54 தர்மாராம வீதி, கோட்டை, மாத்தறை மற்றும் துணை அலுவலகம், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு, கோட்டை வீதி, பழைய மாவட்டச் செயலக கட்டடம் மட்டக்களப்பு, மூன்றாம் மாடி புதிய கட்டடம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம், மாவட்டச் செயல கம்மன்னார், A-9 வீதி நீதிமன்றம் அருகாமை கிளிநொச்சி ஆகிய அலுவலகங்களில் 05.08.2025 ஆம் திகதி முதல் 04.09.2025 ஆம் திகதவரை வழங்க முடியும். அல்லது ராஜகிரிய 011 286 1431, மாத்தறை 041 224 4684, முல்லைத்தீவு 021 228 6030, மட்டக்களப்பு 065 222 2229 , யாழ்ப்பாணம் 021 221 9400, மன்னார் 023 222 3929 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமும் தகவல்களை வழங்கமுடியும் - என்றார். (அ-எ-26-20-27)

## புலமைப்பரிசில்...

2 ஆயிரத்து 787 பரீட்சை நிலையங்களில் நேற்று நடைபெற்றது. அதில் 3 இலட்சத்து 7 ஆயிரத்து 951 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

அதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம்10 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சை 2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 திகதி முதல் 26 ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## முத்துஐயன்கட்டு...

உள்ள சிப்பாய்களால் தாக்கப்பட்டு காணாமற்போயிருந்தார் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியிருந்த நிலையிலேயே அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

சடலம் நீதவான் முன்னிலையில் குளத்தில் இருந்து மீட்கப்பட்டது. தடயவியல் பொலிஸாரின் ஆய்வுகளுக்குப் பின்னர், உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடைபெற்றநிலையில், உயிரிழப்புக்கான தெளிவான காரணம் கண்டறியப்படாததால், உடற்கூறுகள் மேலதிக பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்குப் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26-20)

## நெடுந்தீவுப்...

கான போக்குவரத்து இடர்பாடுகளைக் குறைக்கும்வகையிலேயே இன்று திங்கட்கிழமை முதல் இந்தப் பரீட்சார்த்தப் படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

நெடுந்தீவுக்குப் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதும், சேவையில் ஈடுபடுவதற்குப் போதுமான படகுகள் இல்லை. இதனால் பயணிகள் பெரும்சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் குறிகாட்டுவான் இறங்குதுறையில் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்ற கலந்துரையாடலில் படகுச் சேவைகளை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

காலை 6.15 மணியளவில் முதலாவது படகும், காலை 6.45 மணியளவில் இரண்டாவது படகும் நெடுந்தீவிலிருந்து புறப்பட்டு மீளவும் காலை 7.30 மணியளவிலும், காலை 8.30 மணியளவிலும் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கிப் பயணிக்கும்.

பிற்பகல் 2.30 மணியளவிலும், மாலை 3.30 மணியளவிலும் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப் படகுகள் புறப்பட்டு மீளவும் குறிகாட்டுவானிலிருந்து மாலை 4 மணியளவிலும், மாலை 4.45 மணியளவிலும் படகுகள் புறப்பட்டு நெடுந்தீவைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-66)

## மலேரியாத்...

இவர் ஐரோப்பா செல்வதற்காக ஆபிரிக்க நாடொன்றில் சிலகாலம் தங்கியிருந்துள்ளார். ஐரோப்பா செல்லும் முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து நாடு திரும்பிய அவர் அவர் கடந்த 2ஆம் திகதி நெடுந்தீவை வந்தடைந்தார். கடுமையான நடுக்கம், மாறாட்டம் போன்ற நோய் அறிகுறிகளுடன் கடந்த 4ஆம் திகதி இரவு நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், உடனடியாகவே மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தநிலையில் கடந்த 5ஆம் திகதி அவருக்கு மலேரியாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அவருக்குத் தொடர்ந்து சிகிச்சைகள் வழங்கப்பட்டு கடந்த 7ஆம் திகதி மலேரியாக் கிருமிகள் அழிக்கப்பட்டபோதும், அவருக்கிருந்த பல்வேறு நோய் நிலைமைகள் காரணமாக சுயநினைவற்றிருந்த அவர், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். (அ-எ-26-66-20)

## நேருக்கு...

பளை, இயக்கச்சியைச் சேர்ந்த சி.சுபாந்தி (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

முறிகண்டியில் இருந்து முழங்காவில் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த காரும் மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தை அடுத்து காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113)

## ஜெனிவாவில்...

இலங்கை தொடர்பான தீர்மானங்களுக்கு கடந்த காலங்களில் இணை அனுசரணை வழங்கிய அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறியுள்ளது. அதனால் இணை அனுசரணை வழங்கும் நாடுகளின் கட்டமைப்பில் மாற்றம் வரவுள்ளது.

இலங்கை தொடர்பான கடந்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய மலாவி, மொன்டினேக்ரோ, வட மாசிடோனியா ஆகிய நாடுகள் இந்தமுறை தீர்மானத்தில் பங்கேற்காமல் இருக்கலாம் என இலங்கை நம்புகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்திருந்தார். அவர் அவதானித்த விடயங்கள் உட்பட இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பான அவரின் அறிக்கை 60 ஆவது அமர்வில் முன்வைக்கப்படவுள்ளது. பெரும்பாலும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி அந்த அறிக்கை முன்வைக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. இந்த அறிக்கையில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் முக்கியமான இடத்தைப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, பொறுப்புக்கூறல் தொடர்பான உள்நாட்டு செயல்முறைகள் வலுப்படுத்தப்பட்டு, அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன என்ற விடயத்தை இலங்கைத் தரப்பு இந்த அமர்வில் எடுத்துரைக்கவுள்ளது. (அ-எ-44)

## புங்குடுதீவில்...

புங்குடுதீவில் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் காயமடைந்துள்ளனர்.

முன்பகை காரணமாக இந்த வாள்வெட்டுச் சம்பவம் நடந்துள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வாள்வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவர் புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அ.அற்புதராசா (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவர். ஏனைய மூவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டு மேற்கொண்டவர் அனலைதீவைச் சேர்ந்தவர் என்றும், அவர் ஏற்கனவே பல குற்றங்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26)

## பரீட்சை...

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகாகுமாரி.

2025ஆம் ஆண்டு தரம் 5ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்று முடிந்துள்ள நிலையிலேயே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

நடந்து முடிந்த 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வினாத்தாளுக்கு பதிலளித்த விதம் தொடர்பாகப் பெற்றோர் மாணவர்களிடம் கேள்வி கேட்பதைத் தவிர்க்கவேண்டும். மாணவர்கள் தங்கள் குழந்தைப் பருவத்தைக் கழிக்க வாய்ப்பளிக்கவேண்டும். புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு, குழந்தையின் குழந்தைப் பருவத்தை அழிக்கவேண்டாம்.

பிள்ளைகளை ஒப்பிட்டுப் பார்த்து பரீட்சையில் மாணவர்கள் என்ன எழுதினார்கள் என்று கேட்டு அவர்கள் தவறான பதில் எழுதியிருந்தால், அவர்களை திட்டவோ தண்டிக்கவோ வேண்டாம். அவர்கள் சரியான பதில் எழுதினாலும் சரி, தவறான பதில் எழுதினாலும் சரி, அந்த நேரத்தில் பிள்ளைகள் வினாத்தாளை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதே முக்கியமானது.

புலமைப்பரிசில் பரீட்சை என்பது பிள்ளைக்கு ஒரு பரீட்சை மட்டுமே. இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பரீட்சைகளை எதிர்கொள்ளும் திறனைக் கொண்டுள்ளனர். புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அழுத்தத்துக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என்று தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விபத்தில் உயிரிழந்த

# பிரபாகரசர்மா, மகனின் நினைவுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 11

கடந்த மே மாத இறுதியில் ஓமந்தையில் நடந்த கோர விபத்தில் உயிரிழந்த யாழ்.இந்தியத் துணைத்தூதரக அதிகாரி சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரசர்மா மற்றும் அவரது மகன் பி.அக்ஷய் சர்மா ஆகியோரின் நினைவுப் பிரார்த்தனை நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் இருவரதும் நினைவாக கலாநிதி. பிரபாகரசர்மா சீதாலட்சுமி தொகுத்த 'கனா' எனும் நினைவு நூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

கலாநிதி சீதாலட்சுமி பிரபாகரன் நூலை வெளியீடு செய்து வைக்க யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீசாய்முரளி முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நினைவுரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப்பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, பேராசிரியர் என். சண்முகலிங்கன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ச-66)

# 'லசோ தியவென பூமிய' கவிதைத் தொகுப்பு வெளியீடு

கொழும்பு, ஓக. 11

புகழ்பெற்ற தமிழ் கவிஞர் ருத்மூர்த்தி சேரனின் தெரிவுசெய்யப்பட கவிதைத் தொகுப்பின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் 'லசோ தியவென பூமிய' (கண்ணீரில் உருகும் நிலம்) நாளை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கொழும்பு தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் வெளியிடப்படவுள்ளது.

சேரனின் நீண்டகால கவிதைகளின் தொகுப்பு சிங்கள மொழிபெயர்ப்பில் வெளிவருவது இதுவே முதல் தடவை. முக்கியத்துவம்மிக்க இப்படைப்பாக்கம் மனித உரிமைச் செயற்பாட்டாளரும், எழுத்தளாரும் மற்றும் சட்டத்தரணியுமான சஞ்சுளா பீட்டர்ஸினால் படைப்பாக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலாநிதி குமுது குசும் குமார சிறப்புரையாற்றவுள்ளார். (ச-இ)

'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி'

# ஓவியப்போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 11

நல்லூர் உற்சவ காலத்தின்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வஸ்பர் செயற்றிட்டம் நிகழ்த்தும் நீர்வளம் பேணல் பற்றிய 10 நாள் சிறப்புக் கண்காட்சியுடன் சார்ந்தொழுகும் வகையில் சிறகுகள் அமையம் முன்னின்று நடத்தும் ஓவியப்போட்டி இடம்பெறவுள்ளது.

போட்டித் தலைப்புகளாக பிரிவு 1: தரம் 1 - தரம் 5 மாணவர்களுக்கு 'என் கிராம தண்ணீரின் கதை' 'நீர் இல்லாது வாழ்க்கை இல்லை' ஆகியனவும் பிரிவு 2: தரம் 6 - தரம் 8 மாணவர்களுக்கு 'நிலத்தடி நீர் - கண்ணுக்குத் தெரியாத செல்வம்', 'நீர் பாதுகாப்பு - நம் பொறுப்பு', 'நிலத்தடி நீர் - நம் எதிர்காலம்' ஆகியனவும் பிரிவு 3: தரம் 9 - தரம் 13 மாணவர்களுக்கு 'நிலத்தடி நீர் - உயிரின் அடிக்கல்', 'நீர் தட்டுப்பாட்டைத் தடுக்க - இன்று செயற்படு', 'நிலத்தடி நீர் - சூழலின் அடிநாதம்' ஆகியனவும் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் பெயர், தரம், பாடசாலையின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டு சித்திரங்களை 'சிறகுகள் அமையம், இல 21/2 குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் நல்லூரில் இடம்பெறும் நீர்வளக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விவரங்களைப் பெற 077 218 1459 / 076 244 4504 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்புகொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுளது. (ச-41)



நெடுந்தீவு குழந்தை இயேசு இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் வாகனப் புகைப்பரிசோதனை நிறுவனமான Drive Green நிறுவனத்தின் அனுசரணையில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நெடுந்தீவில் அமைந்துள்ள புனித பாத்திமா அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)

## ஒன்றோடு...

மிருசுவிலில் நேற்று இரவு நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இரவு 7 மணியளவில் மிருசுவில் பகுதியில் ஏ9 வீதியில் நடந்துள்ளது. பளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் திடீரென நிறுத்தப்பட்டதால், பின்னால் பயணித்த கூலர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியது. பின்னால் வந்த டிப்பர் வாகனம் கூலர் வாகனத்தை மோதியுள்ளது. அதனால் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் வலதுபக்கம் சென்ற கூலர் வாகனம் எதிர்த்திசையில் பயணித்த காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த மிருசுவிலில் வசிக்கும் கு.ஜெரோம்காந் (வயது-36) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்துத் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-159-26)

# கோயில் ஒழுங்குவிதிகள் நல்லூரில் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஓக.11

சைவத்திருக்கோவில்கள் பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறைகள் தொடர்பான தொடர் கலந்தாய்வுகளும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறைகளும் சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் தலைமையில் சைவபரிபாலன சபையில் ஆரம்பிக்கப்பட்டு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலப்பகுதியில் சிவகுரு ஆதீனத்தில் தினமும் மாலை வேளைகளில் இடம்பெற்று வருகின்றது.

இவை பிரகடனமாகச் சைவ அமைப்புகளின் இணையத்தால் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இதுதொடர்பான கரிசனைகளை ஆர்வமுள்ள எவரும் தினமும் பி.ப. 3 மணி முதல் மாலை 4 மணிவரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் கலந்துரையாடலாமெனச் சைவ அமைப்புகளின் இணையத்தின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-66)



வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு முன்னெடுத்துள்ள சமஷ்டித் தீர்வை வலியுறுத்திய வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 100நாள் முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் ஒன்பதாவது நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி பளைப் பகுதியில் கவனவீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-113)

# தனித்துவிடப்பட்ட ஜனாதிபதி அநுர

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.11

தன்னுடன் இருக்கும் அனுபவமற்ற அணி காரணமாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனித்துவிட்டார். இந்த அரசு முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

சஜித்துடன் நல்ல அனுபவம் உள்ள அணி ஒன்று உள்ளது.அது பலமான அணி.சர்வதேச நாடுகளுடன் மிகவும் நெருக்கமான உறவை ஏற்படுத்தி விடயத்தைச் சாதிக்கக் கூடிய அணி.சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக் கூடிய அணி அது.

பொருள்களின் விலையைக் குறைப்போம் என்றார்கள்.எரிபொருள்களின் விலைகளை குறைப்போம் என்றார்கள்.மின் கட்டணத்தைக் குறைப்போம் என்றார்கள். ஆனால் இப்போது கூடுகிறதே தவிர குறையவில்லை - என்றார். (ச-75)

பணியாளர் தேவை
NATURE CURE & CARE
சங்கத்தானை, அரசடிச்சந்தியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு பெண் உதவியாளர் தேவை.
கா.பொ.த (உயர்தரம்) கற்றிருத்தல் நல்லது. நேரில் வரவும்
தொடர்பு: 076 658 8555

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.08. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org